முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் முருகநாயனார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

04.01.2019, வெள்ளிக்கிழமை

1. **தயவுமிக்க தரும ராசனே**
**தன்னார்வ தொண்டுகளை பெருக்கி**
**நேயமிக்க சமூகம் படைக்க**
**ஞானியாக வந்த ஆறுமுக அரங்கனே**

2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் ஒளி சூட்சும நூலை
வரங்களென **விளம்பி சிலை திங்கள்**
**வல்லமைபட இருபான் திகதி புகர் வாரம்**
**(விளம்பி வருடம் மார்கழி மாதம் 20ம் நாள் 04.01.2019, வெள்ளிக்கிழமை)**

3. **வாரமதில் முருகநாயனார் யானும்**
வழங்கிடுவேன் உலகோர் நலம் பெற
வாராந்திர சித்தர்கள் பூசை
வணங்கி மக்கள் தானும் தொடர

4. தொடரவே ஞானிகளின் ஆசி
துணைகள் கிட்டி உலகமக்கள்
இடரை வெல்லும் சக்தி பெறுவர்
இடர்களில்லாத வாழ்வும் காண்பர்

5. காண்கவே உலக மாற்றத்துக்கும்
கடமை தவறா நல்படைகள் உருவாகி
பெண்களும் ஞானவழி தன்னை
பிசகில்லா ஏற்று வர வேண்டும்

6. வேண்டியே ஞானிகள் பூசை
விடாது செய்து கொண்டுமே
உண்டான நல்வரனை தருக என
ஒவ்வொரு நாளும் வேண்டுதல் வைக்க

7. வைக்கவே ஞானவான் நல்குணவான்
வாழ்வில் துணையாக ஞானிகள் தயவில்
ஊக்கமுடன் கண்டு சிறக்கும்
உலகில் இல்லறம் கண்ட பெண்கள் எல்லாம்

8. பெண்களெல்லாம் ஞானிகளிடம்
புகழுள்ள ஞானமுள்ள சேய்கள்
நன்மக்கள் தவழ வேண்டுமென
நாளும் நாளும் வேண்டிவர

9. வருகவே கர்ப்ப காலங்களில்
வள்ளல் பெருமான் ஞானிகளை
ஆறுமுகனை எண்ணி பூசைகள்
அளவிலா சிந்தை வைத்து செயல்பட

10. செயல்பாடுகள் உண்மையாகவும்
சிறப்புடன் தேகமனோ பலமுடன்
தயவு சிந்தைபட நடந்து கொண்டு
தருமம் செய்து கொண்டும் இயங்கி

11. இயங்கிட நீங்கள் ஞானியாவதுடன்
இணையிலா ஞானவான்களை தந்து
தயவு நிறைந்த உலகமாற்றத்துக்கும் உதவிடுவீர்
தவராசன் வழிக்குவர சிறந்திடுவீர் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் முருகநாயனார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

அளவற்ற தயவுமிக்க தருமராசனே உலகினில் சுயநலம் இல்லாத பொதுநலம்மிக்க தன்னார்வ தொண்டுகளை அதிகமாக செய்து செய்து நேயம்மிக்க சமூகத்தினை படைத்து யுகமாற்றம் செய்திடவே முருகப்பெருமானின் அவதாரமாக வந்துதித்த ஆறுமுக அரங்கமகா தேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் மார்கழி மாதம் 20ம் நாள் 04.01.2019, வெள்ளிக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே முருகநாயனார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் முருகநாயனார்.

வாரந்தோறும் செய்கின்ற சித்தர்கள் சிறப்பு வழிபாட்டினை மக்களெல்லாம் பயபக்தியுடன் பணிந்து வணங்கி தொடர்ந்து செய்து வர வேண்டும். இவ்விதமே சித்தர்கள் பூசைகளை மக்களெல்லாம் தொடர்ந்து செய்து வரவர, ஞானிகளின் ஆசிகளும் அருளும் ஞானிகளின் துணையும் அவர்களுக்கு கிடைத்து அவர்களுக்கு உண்டான துன்பங்களை வெல்லும் சக்தியினை பெற்றிடுவார்கள். துன்பம் ஏதும் இல்லாத வாழ்வினை பெறுவார்கள். உலக மாற்றத்திற்கும் கடமை தவறாத நல்ல வலுவான தொண்டர் படை உருவாக பெண்களும் ஞானவழிதனை பிசகின்றி ஏற்று தொண்டுகளை செய்திட முன் வர வேண்டும்.

பெண்கள் உலக மாற்றத்திற்கு தொண்டுகளை செய்திட ஏதுவாக அவர்களெல்லாம் தினம்தினம் மறவாமல் ஞானிகள் பூஜைகளை திருவிளக்கு ஏற்றி வைத்து வழிபாடு செய்து வர வேண்டும். பூஜைகளின் முடிவினிலே ஞானிகள் திருவடி பற்றி "முருகா, முருகா, முருகா ஞானவழிகளை பெண்களாகிய நாங்கள் பின்பற்றி நடந்திடவும், உலகப் பெருமாற்றத்திற்கு தொண்டுகளை செய்திடவும் உண்டான நல்ல வரனைத் தருக" என மனம் உருகி வேண்டுகோள் வைத்து வரவர, ஞானிகளும் மனம் இறங்கி ஞானவானை நல்ல குணவானை அவர்களுக்கு வாழ்க்கை துணையாக தயவு கொண்டு அருள் செய்வார்கள். நல்வரனை ஊக்கமுள்ள ஞானவானை குணவானை பெண்கள் வரனாக பெற்று சிறப்படைவார்கள்.

உலகினில் திருமணம் ஆன பெண்களெல்லாம் ஞானிகளின் திருவடி பற்றி பூஜைகள் செய்து ஞானிகளிடத்து புகழுள்ள ஞானமுள்ள நல்ல பண்புள்ள புத்திரபாக்கியத்தை ஞானமுள்ள குழந்தைகளை வரமாக பெற்றிட நாளும் நாளும் வேண்டுகோள் வைத்து வர வேண்டும். அவ்விதமே செய்து வர, கர்ப்பகாலத்திலும் வள்ளல் பெருமான் ராமலிங்கசுவாமிகளையும், ஞானிகளையும், முருகப்பெருமானையும் எண்ணி பூசைகளை அளவிலாது எந்நேரமும் சிந்தையிலிருந்து விடுபடாது செபித்து செயல்பட வேண்டும். கர்ப்பகாலத்தினில் பெண்களின் செயல்பாடுகள் உண்மையாகவும், சிறப்புடனும் இருப்பதோடு தேகஆரோக்கியத்தில் மலஜல குற்றமில்லாமல் பார்த்துக் கொண்டு தேகஆரோக்கியத்தில் கவனமாக இருக்க வேண்டும், மனோதிடத்துடன் நடந்து கொள்ள வேண்டும், தயவு சிந்தையுடன் இருக்க வேண்டும், தருமங்களை தாராளமாய் செய்து வர வேண்டும்.

இப்படி சதாசர்வ காலத்தும் பேறுகாலத்திலே பெண்கள் இயங்கினால், அது பேறு காலத்திற்கு பின்னும் தொடர்ந்திட பெண்கள் ஞானம் பெற்று ஞானியாக ஆவதுடன் இணையில்லா ஞானவான்களை உலகிற்கு தந்து தயவு நிறைந்த உலகமாய் இவ்வுலகை மாற்றும் உலகப்பெருமாற்றத்திற்கும் பேருதவியாய் இருப்பீர்கள், நீங்களெல்லாம் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரை ஞானகுருவாக ஏற்று அரங்கனை பின்தொடர்ந்து ஞானவழிகளிலே வந்திட சிறப்படைவீர்கள் என பெண்களும் ஞானம் பெற வழியுரைக்கின்றார் மகான் முருகநாயனார்.

–சுபம்–